அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2004 இன் இல. 329

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. எம். ஜே. ஜினதாச அவர்கள் 2004, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து மேல் அறிவித்தல் வரும் வரை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளராக விளங்குவார்.

டீ. விஜேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

12-596

அரசாங்க அறிவித்தல்கள்

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

பின்வரும் பதிவு இலக்கங்களுடனான வாகனங்களின் உரிமையை மாற்றிக் கொள்வதற்கான உரிய விண்ணப்பப்படிவங்கள் இந்தத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத நிலைமைகளினால் இந்த உரிமை மாற்றங்கள் தாமதப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்வாகனங்களின் உரிமை மாற்றங்கள் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின், அவற்றை உடனடியாக இத்திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டுவருமாறு பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான ஆட்சேபனைகள் ஏதும் கிடைக்காத பட்சத்தில், உரிமையாளர்களால் (உடைமை மாற்றம் செய்பவர்களால்) ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை எனக் கருதப்பட்டு, உரிமை கோருபவர்களுக்கு இவ்வாகனங்களின் உடைமையை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

14 நாட்களுள் பின்வரும் வாகனங்களின் உரிமை மாற்றங்கள் தொடர்பான எழுத்துமூல ஆட்சேபனைகள் ஏதும் கிடைக்கப்பெறாவிடில், அந்த 14 நாட்கள் முடிவில் உரிமை மாற்ற ஆவணங்களைச் சமர்ப்பித்திருப்போருக்கு அவ்வுரிமை மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்.

25.10.2004.

வாகனத்தின் இலக்கம்	வாகனம் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்களின் விலாசம்	புதிய உரிமையாளரின் விலாசம்
6 ஸ்ரீ 4192 (கார்)	தலைவர், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காலி வீதி, கொழும்பு 3	சேனாதிராசா பாலசுந்தரம், "சேனாதறை" அல்வாயி வடக்கு, அல்வாயி
4 ஸ்ரீ 3331 (கார்)	மொஹமட் முஸ்தாபா, மொஹமட் நிஸ்வி 21/ 29, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 5	மாக் எச் விலியம்ஸ் 210, அமெரிக்க தூதரக றோட், கொழும்பு 3

12-688